<u>தலைமை நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவாரூர்</u>

<u>MCOP. No. 131/2023</u>

PW : 2

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு. திருநீலகண்டன் | த /பெ. | | |
| கிராமம் | : | | தாலுக்கா | : | |
| ஜாதி | : | | தொழில் | : | |
| மதம் | : | | வயது | : | |

2025 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தின் 03 ஆம் தேதி ........................ பிரிவு 4 ஆணையுறுதி சட்டம் 1969 ன் படி திரு. V. சுந்தரராஜ், M.L., அவர்கள் முன்பாக ஆணையிட்டு உறுதி கூறப்பட்டது.

**<u>03.03..2025</u>**

<u>முதல் விசாரணை</u>

நான் எனது தரப்பில் நிருபண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதிலுள்ள சங்கதிகள் உண்மையானவை, அதிலுள்ள சங்கதிகளை நான்தான் எனது வழக்கறிஞருக்கு கூறினேன். அதில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான்.,06.08.2024 அன்று திருவாரூர் மருத்துவக்கல்லூரி மருத்துவமனை வழங்கிய டிஸ்ஜார்ஜ் சம்மரி நகல் மசாஆ 14 ஆகும்.

1ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்குவிசாரணை

விபத்து நடந்த சாலை தெற்கு-வடக்கு சாலை என்றால் சரிதான். இந்த விபத்து குறித்து நான் காவல்நிலையத்தில் புகார் அளித்துள்ளேன். தெட்சணாமூர்த்தி மகன் மோகன்ராஜ் என்பவர் ஊரில்தான் இருக்கிறார். அவர்தான் விபத்து சம்பந்தமாக புகார் கொடுத்துள்ளார் என்றும் நான் விபத்தை நேரில் பார்க்கவும் இல்லை புகார் கொடுக்கவும் இல்லை என்று சொன்னால்

சரியல்ல. விபத்திற்கு 2 வது எதிர்மனுதாரர் எவ்விதத்திலும் பொறுப்பல்ல என்றும் விபத்திற்கு இறந்துபோன தெட்சணாமூர்த்திதான் காரணம் என்றும் சொன்னால் சரியல்ல.

தலைமை நீதித்துறை நடுவர்,
திருவாரூர்.

தலைமை நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவாரூர்

MCOP. No.131 / 2023

03/03/2025

PW :1

கலா, க/பெ.

1ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்குவிசாரணை

விபத்தை நான் நேரில் பார்க்கவில்லை என்றால் சரிதான். விபத்தில் காயம்பட்டது எனது கணவர் தெட்சணாமூர்த்தி. எனது கணவர் தெட்சணாமூர்த்தி தனக்கு காயம்பட்டதற்காக மருத்துவமனையில் சேர்ந்து சிகிச்சை பெற்று வீட்டிற்கு திரும்பி வந்து நான்கு ஆண்டுகள் கழித்து 06.08.2024 ஆம் தேதி இறந்தார் என்றால் சரிதான். விபத்தில் ஏற்பட்ட காயத்தினால்தான் எனது கணவர் இறந்தார் என்பதற்கு உடல்கூறாய்வு எதுவும் செய்யவில்லை என்றால் சரிதான். எனது கணவரின் மரணம் இயற்கைமரணம் என்றும் விபத்திற்கும் எனது கணவர் இறப்பிற்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல. எனது கணவரின் இறப்பிற்காக நான் நஷ்டஈடு கோரமுடியாது என்றால் சரியல்ல. நான் கேட்டுள்ள நஷ்டஈடு தொகை மிகஅதிகம் என்றால் சரியல்ல. விபத்து சமயத்தில் விபத்தை ஏற்படுத்தியதாக சொல்லும் TN 51 AD 3433 என்ற இருசக்கர வாகனம் 1ம் எதிர்மனுதாரருக்கு சொந்தமாக இருக்கவில்லை என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. அந்த வாகனத்தை 1ம் எதிர்மனுதாரர் வேதாரண்யத்தில் உள்ள பஜாஜ் டீலரிடம் 03.11.2017 அன்று விலைக்கு கொடுத்துவிட்டு அதற்கான ஆவணங்களில் கையெழுத்துசெய்துகொடுத்துவிட்டு எக்ஸ்ஜேன்ஞ் ஆக புதிய வாகனத்தை வாங்கிகொண்டுள்ளார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. விபத்து சமயம் ஓட்டிச்சென்ற 2வது எதிர்மனுதாரருக்கும் 1ம் எதிர்மனுதாரருக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றாலும் விபத்து சமயம் 1ம் எதிர்மனுதாரரின் அனுமதியின் பேரில் மேற்கண்ட இருசக்கரவாகனத்தை ஓட்டிச்செல்லவில்லை என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கிற்கு வேதாரண்யத்தில் உள்ள பஜாஜ் இருசக்கரவாகன விற்பனையாளர் மற்றும்

அதன் உரிமையாளர் இந்த வழக்கில் அவசியமான தரப்பினர் என்றும் அவர்தான் நாங்கள் கோரும் இழப்பீடு நஷ்டஈடு தொகையை கொடுக்க கடமைபட்டவர் என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கிற்கு 1ம் எதிர்மனுதாரர் தேவையற்ற தரப்பினர் என்றால் சரியல்ல. நான் கோரியுள்ள இழப்பீடு தொகை அதிகம் என்றால் சரியல்ல.

தலைமை நீதித்துறை நடுவர்,
திருவாரூர்.